

பல்லாவரம் வடக்கு பகுதி 16வது வட்ட தி.மு.க. சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பகுதி கழகச் செயலாளர் மண்டலத் தலைவர்இ. ஜோசப் அண்ணாதுரை ஏற்பாட்டில் வட்டக் கழகச் செயலாளர் எம். அந்தோணி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ அன்பரசன், தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக் மாவட்டக் கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் அணிகளின் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

# திருவாரூரில் நெசவாளர் அணி கிழக்கு மண்டல ஆலோசனைக்கூட்டம்!

## அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி - முனைவர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்பு!

திருவாரூர்,அக்29

திருவாரூரில் கழக நெசவாளர் அணியின் கிழக்கு மண்டல நிர்வாகிகளின் ஆலோசனைக்கூட்டம் 30.10.2023 அன்று நடைபெற இருக்கிறது. இந்த கூட்டத்தில் கழக துணைப்பொது செயலாளர் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., உள்ளிட்டோர் பங்கேற்க இருக்கின்றனர்.

திமுக நெசவாளர் அணியின் கிழக்கு மண்டல ஆலோசனை கூட்டம், திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் 30.10.2023 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற இருக்கிறது. கூட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி துணைத்தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில செயலாளர் காஞ்சி தி.அன்பழகன், மாநில செயலாளர்கள் எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, பரணி.கே.மணி, நெல்லை சே.பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்து. ரவிச்சந்திரன்,துணை செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை ஏற்கின்றனர்.

கூட்டத்திற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர். காந்தி அவர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றுகின்றனர்.

மேலும் கூட்டத்தில், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில நெசவாளர் அணி செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

திருவாரூர் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பி.சுதந்திரமணி ,தஞ்சை மாவட்ட அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கூட்டத்தில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைநகர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக பணிகள் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

### கர்நாடக காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களிடம் பா.ஜ.க. ரூ.50 கோடி பேரம்!

# காங்கிரஸ் எம்.எல்.ஏ. பரபரப்பு குற்றச்சாட்டு!

## வீடியோ ஆதாரம் இருப்பதாக பேட்டி!

பெங்களூரு, அக்.29-

கர்நாடக மாநில காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களிடம் அணி தாவ பா.ஜ.க. 50 கோடி ரூபாய் பேரம் பேசுவதாக காங்கிரஸ் எம்.எல்.ஏ. பரபரப்பு குற்றம்சாட்டியுள்ளார்.

மண்டியா தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ. வான ரவிகுமார் கணிகா, தாவணகெரேவில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், கர்நாடகாவில் கடந்த 2019ம் ஆண்டு ம.ஜ.த.காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை பணம் மற்றும் பதவி ஆசை காட்டி கவிழ்த்த கும்பல், தற்போது மீண்டும் காங்கிரஸ் கட்சியில் உள்ள சில எம்.எல்.ஏ.க்களை விலை கொடுத்து வாங்குவதற்கான முயற்சி மேற்கொண்டு வருவதாக விமர்சித்தார்.

காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களிடம் பேரம் பேசும் கும்பலில் பா.ஜ.க. மூத்த தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எடியூரப்பாவுக்கு உதவியாளராக இருந்த ஒருவரும், மைசூரு மற்றும் பெலகாவி பகுதியைச் சேர்ந்த தலா இருவரும் உள்ளதாக கூறிய ரவிகுமார் கணிகா, அணி தாவ 50 கோடி ரூபாய் தருவதாகவும், அமைச்சரவையில் வாய்ப்பு கொடுப்பதாகவும் பேரம் பேசுவதாக தெரிவித்தார்.

காங்கிரஸ் எம்எல்ஏக்களிடம் அந்த கும்பல் பேரம் பேசுவது தொடர்பான வீடியோ ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும், அதை தக்க சமயத்தில் வெளியிடுவேன் என்றும் ரவிகுமார் கணிகா குறிப்பிட்டார்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.முக. செயற்குழுக் கூட்டம், வருகிற (02.11.2023 -வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் செங்கல்பட்டு மதுராந்தகம் ஜி.எஸ்.டி சாலையில் மாமண்டூர் மனோஜ் பவன் ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் க. செல்வம் எம்.பி, டி.வி.கோகுலகண்ணன், கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், டாக்டர் சுபேர் கான் காஞ்சிபுரம், ஜெ.பச்சையப்பன் (உத்திரமேரூர்), கான்ஸ் டன்டைன் ரவிந்திரன் (மதுராந்தகம். கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் (செய்யூர்), ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள் மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : வருகின்ற நவம்பர் 5 அன்று திருவள்ளூரில் முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெறும் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டத்தில் பங்கேற்பது சம்மந்தமாக. வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல். கழக ஆக்கப் பணிகள்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் அரும்புலியூர் ஊராட்சி மன்ற தலைவரும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கா. வெங்கட்ராமன் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் வாழ்த்தினார். உடன் மேயர் மகாலக்ஷ்மி யுவராஜ், ஒன்றிய கழகச் செயலாளர் டி.குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வசந்தி, எஸ்.ஆர். வெங்கடேசன், கோ.சிவராமன், என். எஸ். ரவி, கு.துரைவேல், பி.வெ. பாலமுருகன், மோகன், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை, சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தொடங்கி வைத்து, வேலைவாய்ப்பினை பெற்ற இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்றஉறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதிரஷ்மி சித்தார்த் ஜகடே, மண்டல இயக்குனர் (வேலை வாய்ப்பு) இரா. தேவேந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தலைவர் பதவியை ஓராண்டு நிறைவு செய்த

# கார்கேவுக்கு காங்கிரஸ் பாராட்டு!


## ‘தொலைநோக்குப் பார்வை கொண்டவர்’ என கருத்து!

புதுடெல்லி, அக். 29-

காங்கிரஸ் தலைவர் பதவியில் மல்லிகார்ஜுன கார்கே ஓராண்டை நிறைவு செய்தார். அவரது தலைமையில் கட்சி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருப்பதாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

ஓராண்டு நிறைவு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு கடந்த ஆண்டு தேர்தல் நடந்தது. மல்லிகார்ஜுன கார்கேவும், சசிதரூர் எம்.பி.யும் போட்டியிட்டனர். இதில் கார்கே அமோக வெற்றி பெற்றார்.

கடந்த ஆண்டு அக்டோபர் 26-ந் தேதி, காங்கிரஸ் தலைவர் பொறுப்பை



முறைப்படி ஏற்றுக் கொண்டார். அவர் பதவி ஏற்று ஓராண்டு நிறைவடைந்துள்ளது.

இதையொட்டி, காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ ‘எக்ஸ்’ பக்கத்தில் அவருக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களுக்கு நன்மை செய்ய உறுதி எடுத்துக் கொண்டவர். ஜனநாயகம், சமூக நீதி, மதச்சார்பின்மை, உள்ளடக்கிய வளர்ச்சி, தேச பக்தி ஆகிய காங்கிரசின் பண்புகள் அமையப் பெற்றவர்.

வேட்கையும், விடாமுயற்சியும் இருந்தால் சாதிக்க முடியும் என்பதற்கு அவர் ஒரு உதாரணம்.

**55 ஆண்டுகள் கால வெற்றி**

வட்டார தலைவர் என்ற எளிய பதவியில் இருந்து கட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக உயர்ந்துள்ளார். 55 ஆண்டு கால தேர்தல் வெற்றிக்கு சொந்தக்காரர். இது, அவரது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை காட்டுகிறது.

தான் நம்பும் கொள்கைகளுக்காக போராடுபவர். அவருக்கு அச்சமே கிடையாது. ஏழைகள் மற்றும் நலிந்தோரின் உரிமைகளுக்காக பாடுபடுபவர். அவரது தலைமையில் கட்சி கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது. கட்சி கட்டமைப்புக்கு புத்துயிரூட்டியதில் முக்கியப்பங்கு வகித்தார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. தலைமை! வே.மதியழகன் முன்னிலை! மதுரவாயல் தெற்கு

# 149வது வட்டத்தில் - அண்ணா, கலைஞர் திருவுருவச் சிலைகள்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இன்று திறந்து வைக்கின்றனர்!

சென்னை, அக். 29-

சென்னை தெற்கு மாவட்டம் - மதுரவாயல் தெற்குப் பகுதி - 149வது வட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் வளசரவாக்கம் - ஆழ்வார் திருநகரில் நிறுவப்பட்டுள்ளது.

இச்சிலைகளின் திறப்பு விழா இன்று (29.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பகுதி துணைச் செயலாளர் வே.மதியழகன், வட்டச் செயலாளர் த.ரமேஷ், திருமதி செல்வி ரமேஷ் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.கிருஷ்ணமூர்த்தி, தி.நா.கமலநாதன், ஆர். சுரேஷ்பாபு, எம்.குமார், பி.எஸ்.துரைசாமி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி.யும் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை, சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியனும் திறந்து வைக்கிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, எம்.எல்.ஏ., மு.மகேஷ்குமார், க.தனசேகரன், காசிமுத்துமாணிக்கம், நொளம்பூர் வே.ராஜன், அ.ம.துரை வீரமணி, எஸ்.பத்மபிரியா, க.சோமு, பி.மணிமாறன், எஸ்.குணசேகரன், த.விஸ்வநாதன், மு.மனோகரன், பா.வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன், வ.செல்வகுமார், வீர.கனிமொழி கே.கண்ணன், மு.ராஜா, எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், எஸ்.வி. ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், துரைகபிலன், சு.சேகர், ஜி.வெங்கடேசன் உள்பட பலரும் கலந்துகொள்கின்றனர்.

எஸ்.கார்த்திகேயன், கே.எஸ்.பிரதாபன், கே.எஸ்.பெருந்தகை ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### கழிவுநீர் உந்து குழாய்கள் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால்

# எம்.கே.பி. நகர் கழிவு நீரேற்றும் நிலையம் செயல்படாது!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,அக்29

மண்டலம்-4 (தண்டையார்பேட்டை)-க்குட்பட்ட எம்.கே.பி. நகர் கழிவு நீரேற்று நிலையத்தில் கழிவுநீர் உந்து குழாய்கள் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 30.10.2023 அன்று காலை 11 மணி முதல் இரவு 11 மணி வரை எம்.கே.பி. நகர் கழிவு நீரேற்றும் நிலையம் செயல்படாது.

எனவே, மண்டலம்-4 (தண்டையார்பேட்டை)-க்குட்பட்ட இடங்களில் உள்ள இயந்திர நுழைவாயில்களில் கழிவுநீர் நிரம்பி வெளியேறும் நிலை எற்பட்டால் அவசரத் தேவைகளுக்காக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை வெளியேற்ற கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

பகுதிப் பொறியாளர் - 4 (தண்டையார்பேட்டை) கைபேசி எண். 81449 30904, துணை பகுதிப் பொறியாளர்-4 கைபேசி எண்.8144930254

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க. சுப்பு**

**அக்டோபர் 29 (2011)**



**கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.**

**மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.**

**சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.**

**கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.**

**“பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**